
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1068**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

**ர.பிரகாசு**

**42**

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

மாணவர்கள் நிறுவிய பெரியார் சிலை



# மறைவுக்குப் பின்பும் வாழ வைக்கும் மக்கள் பணி!

கல்லூரி முடித்து வெளியே வந்த காலத்தில், ‘இளந்தமிழர் கழகம்’ ஒன்றை உருவாக்கினார் அண்டிரன். தனித்தமிழ் இயக்கமாகவும், பகுத்தறிவு சிந்தனைகளை பரப்பும் இயக்கமாகவும் இந்த அமைப்பு செயல்பட்டது. பின்னர், 1970-களில் தமிழாசிரியராகப் பணியில் சேர்ந்தார் அண்டிரன். ஒவ்வொரு வகுப்பிலும் கடைசி ஐந்து நிமிடங்கள் பகுத்தறிவு சிந்தனைகளை மாணவர்கள் மனதில் விதைப்பதை, பணியின் கடைசிநாள் வரை வழக்கமாக வைத்திருந்தார். அவர் வீட்டில் எப்போதும் 10, 15 பேராவது தங்கிப் படிக்கும் வழக்கம் இருந்தது. அவர்களுக்கான உயர்கல்வி ஆலோசனை வழிகாட்டியாகவும் அண்டிரன் திகழ்ந்தார். சங்க இலக்கியங்களில் இருந்து, அவர்களுக்கான வாழ்வியல் அறிவுரைகளைத் தருவதும் அண்டிரன் கொண்டிருந்தது தனிச்சிறப்பு.

தமிழாசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே கிராமம் கிராமமாகச் சென்று பகுத்தறிவுப் பிரச்சாரத்தில் ஈடுபடுவது, சுயமரியாதைத் திருமணங்களை நடத்திவைக்கும் பணியையும் செய்து வைத்துள்ளார். தனது வாழ்நாளில் 50-க்கும் மேற்பட்ட சுயமரியாதைத் திருமணங்களை அவர் நடத்தி வைத்துள்ளார்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் அண்டிரனின் மாணவர்கள் மற்றும் அந்த மாணவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். 1980-களில் ஈழத்தில் ஆயுதப் போராட்டம் உருவாகியிருந்த காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., டெலோ போன்ற போராளி இயக்கத்தினருக்கு, தனது தோட்டத்தில் ஆயுத பயிற்சி அளிக்க அனுமதி அளித்தவர் அண்டிரன். சுமார் 50 பேர் ஆறு மாத காலம் அங்கு பயிற்சி எடுத்தனர்.

அண்டிரனின் நண்பரான தமிழ்வாணனும் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். தன்னிடம் பயின்ற மாணவர்கள் ஆயிரக்கணக்கானோருக்கு தமிழ்ப்பெயரைச் சூட்டினார் தமிழ்வாணன். அவரால் சங்கத்தமிழில் பெயர் சூட்டப்பட்ட நூற்றுக்கணக்கானோர் இன்றும் அப்பகுதியில் வசிக்கின்றனர். குறிப்பாக, நயினார்பாளையத்தில் இவருடைய திருமணத்திற்காகத்தான் பெரியாரிடம் தேதி கேட்டனர். “விடுதலைக்கு சந்தா செலுத்துங்கள், உண்மைக்கு சந்தா செலுத்துங்கள் அனுமதி தருகிறேன்” என பெரியார் கூறியுள்ளார். அதன்படியே அவர்களும் சந்தா செலுத்திவிட்டு அழைத்த நிலையில், பெரியாருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார். இதையடுத்து அப்போது அவருடைய திருமணத்திற்கு பெரியார் வர இயலாத நிலையில்தான், ஹசன் திருமணத்திற்கு வருகை தந்தார். அந்தத் திருமணத்தில் வைத்து, தமிழ்வாணன் மகனுக்கு இராவணன் எனப் பெயர் சூட்டினார் பெரியார். மேலும் தன் வீட்டிலேயே ‘பகுத்தறிவு’, ‘விடுதலை’, ‘புரட்சி’ என்றும் பெயர் சூட்டினார் தமிழ்வாணன்.

அதோடு, தமிழ்வாணன் தாளாளராகவும் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றிய கண்ணன் மானிய பள்ளிக்கு தந்தை பெரியார் பெயரைச் சூட்டினார். அரசு உதவி பெறும் இப்பள்ளி இன்றும் அப்பகுதியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அண்டிரனால் உருவாக்கப்பட்ட பெரியார் தொண்டர்கள், அவரிடம் படித்து வளர்ந்த மாணவர்கள் பலர், இணைந்து இப்பள்ளியில் பெரியார் சிலை ஒன்றை நிறுவியுள்ளனர். அண்டிரனால் கொள்கை உணர்வு பெற்ற பலர், இப்போதும் அப்பகுதியில் திராவிட, பொதுவுடைமை, தனித்தமிழ் இயக்கங்களில் ஈடுபாட்டோடு செயல்பட்டு வருகின்றனர்.

அண்டிரனிடம் படித்த சுமார் ஐம்பது பேர் இணைந்து, புலவர் அண்டிரன் அறக்கட்டளை ஒன்றையும் உருவாக்கியுள்ளனர். அந்த அறக்கட்டளை நயினார்பாளையத்தில் ஒவ்வோர் ஆண்டும் கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி வருகிறது. அண்டிரன் பிறந்த நாளில் ஒவ்வொரு ஆண்டும் பொதுக்கூட்டம் நடத்தி வருகிறது. அண்டிரன் மறைந்தும் வாழ்கிறார் தனது செயலால்!

**...பயணிப்போம்.**

## பெரியார் சிறப்புக் கருத்தரங்கம்!




தமிழ்நாட்டின் அரசியல் வழியை, என்றென்றைக்கும் தீர்மானிப்பவராகத் திகழ்கிறார் தந்தை பெரியார். அவரது கருத்துகளுக்கும், செயல்களுக்கும் எதிராக ஆரியத்தின் சூழ்ச்சி, அவர் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல, இன்றும் வெவ்வேறு வடிவம் கொண்டு இயங்கி வருகிறது. தமிழினத்தின் பெயரால் அவர் மீது அவதூறு பரப்புபவர்களுக்கு, வலதுசாரி ஆதரவு முன் எப்போதையும்விட அதிகமாக உள்ளதை கவனிக்க முடிகிறது. அப்படி, நேரடியாகவும் மறைமுகமாகவும் இயங்கிக் கொண்டிருப்பவர்களை அம்பலப்படுத்தும் வகையில், தந்தை பெரியார் திராவிடர் கழகம், சென்னையில் இன்று ( 02.01.2026) வெள்ளிக்கிழமை மாலை சிறப்புக் கருத்தரங்கத்துக்கு ஏற்பாடு செய்துள்ளது.

பெரியாரைத் தூற்றும் தமிழின துரோகிகளும், பெரியாரைப் போற்றும் தமிழ்த் தேசியவாதிகளும் என்கிற தலைப்பில், நடைபெற உள்ள இந்தக் கருத்தரங்கத்தில், தமிழக மக்கள் முன்னணியின் பொழிலன், தமிழ்மண் தன்னுரிமை இயக்கத்தின் பேராசிரியர் த.செயராமன், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் ஜெகதீச பாண்டியன் உள்ளிட்டோர் உரையாற்ற உள்ளனர்.

ராயப்பேட்டை, வி.எம்.தெரு, பெரியார் சிலை அருகில், விஜய் அரங்கத்தில் மாலை 5 மணிக்கு நிகழ்வு தொடங்க உள்ளது. பெரியார் உணர்வாளர்கள் ஒன்றுதிரளும் அரங்கமாக அமையட்டும்!

## ஃப்ளாஷ்பேக்



### 1971-இல் முதலமைச்சருக்கு நினைவுப் பரிசு!



டாக்டர். எம்.முகம்மது ரபி

1971-ஆம் ஆண்டில், நம் தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக நெல்லை வருகை தந்தபோது, அப்போது, நகராட்சி உறுப்பினராக இருந்த என் தந்தையார் எம்.மஸ்தான் அவர்கள், நினைவுப்பரிசு வழங்கிய காட்சி. பின்னர் என் தந்தையார், ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டார். படத்தில், தலைவருடன், அன்றைய அமைச்சர் அன்பிலார், நாடாளுமன்ற நாயகர் ஆலடி அருணா, நெல்லை சூரியநாராயண் ஆகியோர் உள்ளனர். தலைவர் அவர்களின் பெயர் நெய்யப்பட்ட கோரைப்பாய், அன்றைக்கு பெரும் பரிசாக இருந்துள்ளதைப் பார்த்தால் வியப்பாக உள்ளது.

– டாக்டர்.எம்.முகம்மது ரபி, பேராசிரியர் (ஓய்வு),
அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,
பேட்டை, திருநெல்வேலி

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

**கோவி.லெனின்**

**92**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...”



# வாழ்த்தும் தமிழ்நாட்டு மக்கள்!

***கல்லூரி மாணவர்களுக்கு, லேப்டாப் வழங்கும் திராவிட மாடல் அரசின் திட்டத்தை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி எதிர்க்கிறாரே?***

எதிர்க்கட்சித் தலைவர் என்பதற்காக எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டும் என நினைக்கிறார். அ.தி.மு.க ஆட்சியில் வழங்கப் பட்டு வந்த லேப்டாப் திட்டத்தை தி.மு.க. அரசு வந்ததும் நிறுத்திவிட்டு, இப்போது தேர்தல் நேரத்தில் வழங்குவதாக விமர்சித் திருக்கிறார். அ.தி.மு.க.வின் முதலமைச்சர் ஜெயலலிதா கொண்டு வந்த மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கும் திட்டத்தை முடக்கியது தி.மு.க. அரசல்ல. ஜெயலலிதா இறந்த பிறகு அ.தி.மு.க.வின் முதலமைச்சரான எடப்பாடி பழனிசாமிதான் அந்தத் திட்டத்தை நிறுத் தினார். 2019 - ஆம் ஆண்டே லேப்டாப் வழங்குவதை நிறுத்திவிட்டார். லேப்டாப் வழங்கச் சொல்லி மாணவர்கள் போராடிய போதும் எடப்பாடி பழனிசாமி அரசு அந்தத் திட்டத்தைத் தொடரவில்லை. தன்னால் நிறுத்தப்பட்ட திட்டத்தை, தி.மு.க. மீது பழிபோட்டு திசை திருப்பப் பார்க்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்.

தி.மு.க. அரசு செயற்கை நுண்ணறிவுடன் கூடிய லேப்டாப்களைக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்குகிறது. இன்றைய தலைமுறைக்கேற்ற தொழில்நுட்பங்களுடன்கூடிய தரமான லேப்டாப் என்பதுதான் திராவிட மாடல் அரசின் திட்டம். அ.தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்டு உடனடியாகக் காயலான் கடைக்குப் போன மிக்ஸி, கிரைண்டர், ஃபேன் போன்றதல்ல. கலைஞர் ஆட்சியில் வழங்கப்பட்டு, இப்போது வரை ஓடிக் கொண்டிருக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் போல, நீடித்த பயன் தரும் வகையில் லேப்டாப்கள் வழங்கும் திராவிட மாடல் அரசின் திட்டத்தை, அரசியல் நோக்கத்தில் குறை சொல்கிறார் எடப்பாடி பழனிசாமி. அதையும் பொய்யாகச் சொல்கிறார்.

இப்படித்தான், தாலிக்குத் தங்கம் வழங்கும் திருமண உதவித் திட்டத்தை தி.மு.க. ஆட்சி வந்ததும் நிறுத்திவிட்டதாகப் பொய் சொன்னார் எடப்பாடி பழனிசாமி. அந்தத் திட்டம் நிறுத்தப்பட்ட ஆண்டு, 2018. அப்போது ஆட்சியில் இருந்தவர் அவர்தான். தி.மு.க. ஆட்சி அமைந்ததும் மாணவிகளின் உயர்கல்விக்கு உதவும் வகையில் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதுபோலவே, மாணவர்களுக்கான இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தையும் முடக்கியவர் பழனிசாமி. பெண்களுக்கு ஸ்கூட்டி வழங்கும் திட்டம் என்னவானது என்பதும் பழனிசாமிக்கே வெளிச்சம். தன் அலங்கோல ஆட்சியால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட சீரழிவுகளை மறைத்துவிடலாம் என நினைத்து, தி.மு.க. மீது குற்றம்சாட்ட நினைக்கிறார்.

தி.மு.க. ஒருபோதும் காழ்ப்புணர்வுடன் முந்தைய ஆட்சியின் மக்கள் நலத் திட்டங்களை கைவிட்டதில்லை. எம்.ஜி.ஆர். அறிமுகப்படுத்திய சத்துணவுத் திட்டத்தை, உண்மையான சத்துணவுத் திட்டமாக மாணவர்களுக்கு முட்டையுடன் சேர்த்து உணவு வழங்கியவர் கலைஞர். ஜெயலலிதா ஆட்சியில் அமைக்கப் பட்ட அம்மா உணவகங்களை மேம்படுத்தி, தொடர்ந்து செயல்பட வைப்பவர் திராவிட மாடல் முதலமைச்சர்.

வயிறெரிகிறார் எடப்பாடி பழனிசாமி. வாழ்த்துகிறார்கள் தமிழ்நாட்டு மக்கள்.

**...வினா தொடரும்.**

## கருவூலம்

### முதன்முதலில் ஆட்சி!

1967-ஆம் ஆண்டு பொதுத்தேர்தல், தமிழ்நாடு சட்டமன்றத்துக்கான மொத்த இடங்களில், திருமங்கலம் தொகுதியின் வேட்பாளர் எதிர்பாராத வகையில், இயற்கை எய்தியதால் 233 தொகுதிகளுக்குத் தேர்தல் நடைபெற்றது. தி.மு.கழகம் போட்டியிட்ட 173 இடங்களில் 138 இடங்களில் வெற்றிபெற்று, தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131